# ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்கா

## பிரதமர் நரேந்திர மோடி ஆதரவு



**புது தில்லி, செப். 3:** ஜி20 கூட்டமைப்பில் 55 நாடுகளைக் கொண்ட ஆப்பிரிக்க ஒன்றியத்தை இணைப்பதற்குப் பிரதமர் நரேந்திர மோடி ஆதரவு தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியத்தை இணைப்பதற்கான தீர்மானம் தில்லியில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள ஜி20 மாநாட்டில் இயற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜி20 கூட்டமைப்புக்குத் தலைமை வகித்து வரும் இந்தியா, அக்கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாட்டை வரும் 9, 10 ஆகிய தேதிகளில் தில்லியில் நடத்தவுள்ளது. அதில் அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ள உள்ளனர். மாநாட்டுக்கான ஏற்பாட்டுப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு பிரதமர் மோடி பிரத்யேகமாக அளித்த பேட்டியில் கூறியதாவது:

ஜி20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை வகித்து வரும் நிலையில், பல்வேறு நேர்மறையான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில என் மனதுக்கு நெருக்கமாக அமைந்தன.

உலகின் முக்கியப் பொருளாதார சக்திகளின் கூட்டமைப்பாக ஜி20 திகழ்கிறது. சர்வதேச பொருளாதார நெருக்கடிகளை ஒருங்கிணைந்து எதிர்கொள்வதற்காகக் கடந்த நூற்றாண்டின் இறுதியில் ஜி20 கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், கரோனா தொற்றுப்பரவலானது, பொருளாதாரத்தை மையப்படுத்திய கண்ணோட்டம் மட்டும் போதாது என்பதை வெளிக்காட்டியது.

நாட்டின் பொருளாதார மதிப்பை மையப்படுத்தாமல், மக்களின் வளர்ச்சியை மையப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சர்வதேச கட்டமைப்பில் பெரும் மாற்றம் ஏற்பட்டதைப் போல, கரோனா தொற்று பரவலுக்குப் பிறகும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

**சீர்திருத்தங்கள் அவசியம்:** 21-ஆம் நூற்றாண்டில் சர்வதேச சவால்கள் தொடர்ந்து மாறி வருகின்றன. அவற்றைத் திறம்பட எதிர்கொள்வதற்கு ஐ.நா. அமைப்பில் சீர்திருத்தங்கள் புகுத்தப்பட வேண்டியது அவசியம். அனைத்துத் தரப்பு மக்களின் குரலுக்கும் இடம் கிடைக்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அனைவரின் குரல்களுக்கும் செவிசாய்க்காமல் எதிர்காலத் திட்டங்களைத் திறம்பட வகுக்க முடியாது. அதைக் கருத்தில் கொண்டு, ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியத்தை முழுநேர உறுப்பினராக இணைப்பதற்கு இந்தியா ஆதரவளிக்கிறது.

**இந்தியாவின் கொள்கை:** சர்வதேச அளவில் மக்களின் வளர்ச்சிக்குத் தற்போது முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. அதை ஊக்குவிப்பதில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. தெற்குலக நாடுகளில் நம்பிக்கையை விதைக்கும் பணியை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

இந்தியா கடைப்பிடித்து வரும் 'அனைவருடன் இணைந்து அனைவருக்குமான வளர்ச்சி' என்ற கொள்கையானது, சர்வதேச நலனுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது. 100 கோடி வறியவர்களைக் கொண்ட நாடாகவே நெடுங்காலமாக இந்தியா அறியப்பட்டு வந்தது. ஆனால், தற்போது 100 கோடிக்கும் மேற்பட்ட திறன்மிக்க பணியாளர்களைக் கொண்ட நாடாகவும், கோடிக்கணக்கில் இளைஞர்களைக் கொண்ட நாடாகவும் இந்தியா அறியப்படுகிறது.

**'வளர்ச்சியடைந்த இந்தியா':** சர்வதேச அளவில் பெரும் சந்தையாக மட்டுமே அறியப்பட்ட இந்தியா, தற்போது பல்வேறு சர்வதேசப் பிரச்னைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கான இடத்துக்கு உயர்ந்துள்ளது. சமூகப் பொருளாதார வளர்ச்சியில் உலகுக்கே வழிகாட்டும் சக்தியாக இந்தியா உருவெடுத்துள்ளது.

2047-ஆம் ஆண்டு வரை நாட்டுக்குப் பெரும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. அடுத்த 1,000 ஆண்டுகளுக்கான வளர்ச்சியைத் தீர்மானிப்பதற்குத் தற்போது அடித்தளம் இடப்பட்டு வருகிறது. சுதந்திர நூற்றாண்டைக் கொண்டாடும்போது, இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக மாறிவிடும் என்பதில் உறுதியாக இருக்கிறேன்; ஏழ்மைக்கு எதிரான போரில் நாட்டு மக்கள் வெற்றி காண்பர்; கல்வி, சுகாதார வசதிகள் சிறப்பாகக் காணப்படும்; ஊழல், ஜாதியவாதம், பிரிவினைவாதம் ஆகியவை ஒழிந்திருக்கும்.

**நாடு முழுவதும் கூட்டங்கள்:** ஜி20 கூட்டமைப்பின் செயல்பாடுகளில் புதுமையைப் புகுத்தும் நோக்கில் அக்கூட்டமைப்பு நாடுகளின் அமைச்சர்களுக்கான கூட்டங்கள், தலைநகர் தில்லியில் மட்டுமல்லாமல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டன. அவ்வாறான சுமார் 200 கூட்டங்களில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஹம்பி, கேரளம், கோவா, காஷ்மீர் உள்ளிட்ட சுற்றுலாத் தலங்களிலும் அக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

அதன்மூலம் நாட்டின் பன்முகத்தன்மை, கலாசாரம், பண்பாடு உள்ளிட்டவற்றை ஜி20 நாடுகளின் பிரதிநிதிகள் அறிந்து கொண்டனர். மக்களின் வளர்ச்சியை உறுதி செய்வதற்கான திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் அவர்கள் தெரிந்து கொண்டனர். உலகம் சந்தித்து வரும் பிரச்னைகளுக்குத் தேவையான தீர்வுகள் இந்தியாவில் ஏற்கெனவே சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர்.

நாட்டின் மற்ற நகரங்களைப் போலவே காஷ்மீரிலும், அருணாசலிலும் ஜி20 கூட்டங்கள் நடத்தப்பட்டன. அதற்கு குறிப்பிட்ட நாடுகள் (சீனா, பாகிஸ்தான்) எதிர்ப்பு தெரிவிப்பதில் எந்தப் பலனும் இல்லை.

**இலவசங்கள் கூடாது:** சர்வதேச கடன் அதிகரித்துள்ளது வளர்ந்து வரும் நாடுகளுக்கு முக்கியப் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. நாட்டில் உள்ள சில கட்சிகள் இலவசங்களைத் தேர்தல் வாக்குறுதிகளாக வழங்கி வருகின்றன. அத்தகைய இலவச வாக்குறுதிகள் மூலமாகக் குறுகிய காலத்துக்கு அரசியல் ஆதாயம் கிடைக்கலாம். ஆனால், நீண்ட காலத்துக்கு நிதி நிலைத்தன்மை பாதிக்கப்படும். ஏழைகளும், பொருளாதாரத்தில் பின்தங்கியோரும் அதனால் பெரும் விளைவுகளைச் சந்திப்பர். நிதி நிலைத்தன்மையை உறுதி செய்யும் வகையில் மாநில அரசுகள் நடந்துகொள்ள வேண்டும் என்றார் பிரதமர் மோடி.


இந்தப் பேட்டியின்போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி, இணையவழிக் குற்றத் தடுப்பு, உயிரி-எரிபொருள் கொள்கை, பருவநிலை மாற்றம் உள்ளிட்டவை குறித்தும் பிரதமர் மோடி கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

EVA STALIN IAS

# ஆதித்யா எல்-1: சுற்றுப்பாதை உயரம் அதிகரிப்பு

**பெங்களூரு, செப். 3:** சூரியனை ஆய்வு செய்வதற்காக விண்ணில் செலுத்தப்பட்ட ஆதித்யா எல்-1 விண்கலத்தின் சுற்றுவட்டப் பாதையானது ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாக உயர்த்தப்பட்டது.

ஆதித்யா எல்-1 விண்கலமானது பிஎஸ்எல்வி-சி57 ராக்கெட் மூலமாக கடந்த சனிக்கிழமை முற்பகல் 11.50 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு புவியின் தாழ்வட்டப்பாதையில் அந்த விண்கலம் நிலைநிறுத்தப்பட்டது.




ஆதித்யா எல்-1 விண்கலத்தின் சுற்றுப்பாதை உயரம் அதிகரிக்கப்பட்டதைக் காண்பிக்கும் விளக்கப்படம்.

இந்நிலையில், விண்கலத்தின் சுற்றுவட்டப் பாதையானது முதல் முறையாக ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.40 மணிக்கு மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி, விண்கலத்தின் சுற்றுப்பாதையானது பூமியில் இருந்து குறைந்தபட்சம் 245 கி.மீ. தொலைவிலும், அதிகபட்சமாக 22,459 கி.மீ. தொலைவிலும் இருக்கும்படி அதிகரிக்கப்பட்டதாக எக்ஸ் சமூக வலைதளத்தில் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்தப் பணி பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்டது. ஆதித்யா எல்-1 விண்கலம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாகவும், 2-ஆவது கட்ட சுற்றுப் பாதை மாற்றியமைப்புப் பணிகள் வரும் 5-ஆம் தேதி அதிகாலை சுமார் 3 மணிக்கு மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் இஸ்ரோ குறிப்பிட்டுள்ளது.

பலகட்ட சுற்றுப்பாதை மாற்றியமைப்புக்குப் பிறகு ஆதித்யா-எல்1 விண்கலமானது, பூமியில் இருந்து சுமார் 15 லட்சம் கி.மீ. தொலைவில் உள்ள எல்1 புள்ளியை 125 நாள்களில் அடையும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# இலவசம் என்பது இலவசம் அல்ல!



கிருங்கை சேதுபதி

**மூலப் பொருள்களுக்கு இல்லாத கவர்ச்சி இலவசப் பொருள்களுக்கு உண்டு. விலை கொடுத்து வாங்கும் பொருளின் தரத்தைப் பார்ப்பதைவிட, இலவசமாகக் கிடைக்கும் பொருளின் தரத்தை உறுதிப்படுத்துவதிலேயே பலரது அக்கறையும் இருப்பதைப் பார்க்கிறோம்.**

கட்டுரையாளர்:
எழுத்தாளர்.

# நீர்நிலைகளைப் பாதுகாப்போம்

**இரா. சாந்தகுமார்**

அண்மையில் தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்கள்) சட்டம் 2023 அமலுக்கு வந்துள்ளது. இச்சட்டத்தின்படி, நூறு ஹெக்டேர் பரப்பளவிற்குக் குறையாத நிலத்தில் ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் இருப்பினும், அந்த இடத்தில் ஒரு நிறுவனம், வணிகம்,தொழில், வேளாண்மை சார்ந்த திட்டத்தைச் செயல்படுத்த விரும்பினால், அதற்காக மாநில அரசிடம் விண்ணப்பிக்கலாம்.

மாநில அரசால் நியமிக்கப்படும் குழு, பொதுமக்கள் கருத்துகளை கேட்டு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு தனது அறிக்கையை அளிக்கும். இறுதியில், சில நிபந்தனைகளுடன் அரசுக்கு சொந்தமான ஏரி, குளங்கள், ஓடைகள் உள்ளிட்ட நீர்நிலைகள் உள்ள இடங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும்.

தமிழகத்தில், தொழிற்சாலை, விமான நிலையம், பேருந்து நிலையம், குடியிருப்பு என பல்வேறு காரணங்களுக்காக கடந்த காலங்களில் பல குளங்கள்,ஏரிகள் தூர்க்கப்பட்டன. இந்த வகையில் காணாமல் போன நீர்நிலைகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா. 1906-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி சென்னை நகரில் மட்டும் 474 ஏரி, குளங்கள் இருந்தன; தற்போது உள்ளவையோ வெறும் 43.

இன்றைய சென்னையின் முக்கியப் பகுதிகளாக அறியப்படும் நுங்கம்பாக்கம், மாம்பலம், தேனாம்பேட்டை, கொளத்தூர், முகப்பேர் ஆகியவை சில பத்தாண்டுகளுக்கு முன்னர் ஏரி, குளங்கள் நிறைந்திருந்த பகுதிகளே.

தொழில் வளர்ச்சி, மக்கள் பயன்பாட்டிற்கென நீர்நிலைகள் தூர்க்கப்படுவதால், மழைநீர் சேகரிப்புக்கு இடம் இன்றி மாநிலத்தின் நிலத்தடி நீர்மட்டம் கவலைக்குரியதாகி விடுகிறது.

தமிழகத்தில் சிறிய நீர்ப்பாசனத்தில் 97.9 சதவீதம் நிலத்தடி நீர் மூலமாகவே நடைபெறுவதாக ஜல்சக்தி அமைச்சகத்தின் தகவல் கூறுகிறது. இந்நிலையில், நிலத்தடி நீர் பாசனம் செம்மையாக இருக்க வேண்டுமெனில் குளங்கள், ஏரிகளில் நீர் நிறைந்திருத்தல் அவசியம். மாறாக, ஏரிகளும், குளங்களும் ஆக்கிரமிக்கப்படும்போது எதிர்காலத்தில் நிலத்தடி நீர் பாசனம் கேள்விக்குறியாக வாய்ப்புள்ளது.

எனினும், இதனைப் பொருட்படுத்தாமல், நீர்நிலைகள் உள்ள பகுதிகளை மக்கள் நலனுக்கென அரசு ஒருபுறம் சட்டப்படி கையகப்படுத்துகிறது. மறுபுறம், தங்களின் சுயநலத்திற்காக தனி நபர்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்கின்றனர்.

2015-ஆம் ஆண்டு அக்டோபர் மாத இறுதியில் சென்னையைப் புரட்டி போட்ட பெருவெள்ளத்திற்கு நீர்நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டதே முதன்மையான காரணம் என்பதை எவரும் மறுக்கவோ மறக்கவோ இயலாது.

நம் மாநிலத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை 41,127 ஏரிகள் இருந்தன. தமிழகத்தில் உள்ள மொத்த அணைகளின் கொள்ளளவான 347 டிஎம்சி நீரை விட அதிக அளவு நீரினை இந்த ஏரிகளில் தேக்கி வைத்துக் கொள்ளும் வசதியும் இருந்தது.

பல ஏரிகள் ஆக்கிரமிக்கப்பட்டதன் விளைவாக பருவமழை காலங்களில் மழைநீர் தேக்கி வைக்கப்பட முடியாமல் வீணாகச் சென்று கடலில் கலக்கிறது. இவ்வாறு குடிநீராக பயன்படக்கூடிய மழைநீரை கடலில் கலக்க விட்டு, பின்னர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு பல்லாயிரம் கோடி ரூபாயை அரசு செலவு செய்ய முற்படுவதை என்னவென்பது!

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நம் முன்னோர்கள் ஒரு துளி மழைநீர் கூட வீணாகாமல் இருக்க கடைப்பிடித்த நீர் மேலாண்மை பிரமிப்பூட்டுகிறது. ஒரு ஏரியின் உபரி நீர், கால்வாய் வழியே மற்றொரு ஏரிக்குச் செல்லும் விதத்திலும், அந்த ஏரியின் உபரி நீர் அதற்கடுத்தார் போல் உள்ள ஏரிக்கு செல்லும் வகையிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டன.

தற்போதைய தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்பு திட்டங்கள்) சட்டத்தின்படி, இந்த நீர் வழிச் சங்கிலித்தொடர் ஆங்காங்கே அறுபட வாய்ப்புகளுண்டு. இதனால் மழைக்காலத்தில் ஏரிகளின் உபரி நீர், விளைச்சல் நிலங்கள், மக்கள் வசிக்கும் பகுதிகளில் புகுந்து பயிர் சேதத்தையும் உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தக்கூடும்.

சமீபத்தில், நம் நாட்டிலேயே முதல் மாநிலமாக கேரளம், மழைக்காலங்களில் வெள்ளம், கோடைகாலங்களில் வறட்சி என்ற நிலைமைக்கு முடிவு கட்டும் வகையில், நிதி நிலை அறிக்கை போன்று ஒட்டுமொத்த மாநிலத்திற்கான நீர் வரவு- செலவு அறிக்கையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதன்படி பருவமழை, நிலத்தடி நீர் ஆகியவற்றால் கிடைக்கும் மொத்த நீரின் வரவு , விவசாயம், தொழிற்சாலைகள், மக்களின் தேவை ஆகியவற்றுக்கான நீரின் செலவு கணக்கிடப்பட்டு மாநிலத்தின் தண்ணீர் உபயோகம் ஒழுங்குபடுத்தப்படும்.

நீர் மேலாண்மையின் ஒரு சிறந்த நடவடிக்கையாக கருதப்படும் இந்நீர் வரவு செலவுத் திட்டத்தை, நம் நாட்டின் இதர மாநிலங்களிலும் பின்பற்றினால் ஏரி, குளங்கள் போன்ற நீராதாரங்களை பராமரிப்பது முக்கியத்துவம் பெறும்.

நீர்நிலைகள் அடங்கிய அரசின் நிலங்களை மாநில அரசே எடுத்துக் கொள்வதாயினும் அல்லது ஒருங்கிணைத்து தனியாருக்கு தருவதாயினும் அச்செயல் மாநில அரசே, தண்ணீர் தேவை எனும் நெருக்கடியை மாநிலத்தில் உருவாக்குவதற்கு சமமாகும்.

கர்நாடக மாநிலத்தில் ஓர் ஆண்டில் பெய்யும் சராசரி மழை 732 மில்லி மீட்டர். தமிழகத்தின் ஆண்டு சராசரி மழை அளவு 925 மில்லி மீட்டர். ஆக, நம் மாநிலத்தை விட ஆண்டிற்கு சுமார் 182 மில்லி மீட்டர் குறைவாக மழை பொழியும் கர்நாடக மாநிலத்தை நாம் நீருக்காக சார்ந்து இருப்பது, நீர் நிலைகளின் பராமரிப்பில் நாம் மேலும் அக்கறை காட்ட வேண்டும் என்பதையே உணர்த்துகிறது.

தமிழ்நாட்டின் நீர் நிலைகளை முறையாகப் பராமரித்து, பருவமழைக் காலங்களில் நிலத்தடி நீர் உயரும் வண்ணம் மழைநீர் சேகரிப்பு திட்டங்களை அமல்படுத்தினால், நம் மாநிலத்தின் தண்ணீர் தேவைக்காக அண்டை மாநிலங்களின் தயவை எதிர்பார்க்கும் நிலையை மாற்றலாம்.

அதன் முதல்கட்டமாக மிகப்பெரிய அளவிலான நீராதாரங்களை உள்ளடக்கிய அரசு நிலங்களை ஒருங்கிணைத்து அதனை தனியாருக்கு தர வழிவகுக்கும் தமிழ்நாடு நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்ய முன் வர வேண்டியது அவசியம்.

EVA STALIN IAS